செய்தி வெளியீடு எண்:297 நாள் : 20.06.2015

**காஞ்சீபுரம் மாவட்டத்தில் ஆவின் புதிய மாதாந்திர பால் அட்டைகள் நுகர்வோர்களுக்கு வழங்கப்பட்டது.**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு B V ரமணா அவர்கள் நுகர்வோர்களுக்கு தங்கு தடையின்றி நாள்தோறும் ஆவின் பால் குறைந்த விலையில் வாங்குவதற்கு ஏதுவாக காஞ்சீபுரம் மாவட்டம் பகுதிகளான உத்தண்டி, செம்மஞ்சேரி மற்றும் கொளப்பாக்கம் பகுதிகளில் மாதாந்திர பால் அட்டைகளை நுகர்வோர்களுக்கு வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் பால்வளத்துறை ஆணையர் / ஆவின் நிர்வாக இயக்குநர் திரு சுனீல்பாலீவால், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் சீரிய தலைமையின் கீழ் தமிழ்நாட்டில் தற்போது இரண்டாம் வெண்மைப்புரட்சி ஏற்பட்டுள்ளது. இதன் பயனாக தற்போது தமிழகத்தின் பால் கொள்முதல் நளொன்றுக்கு 30.50 இலட்சம் என்ற இலக்கினை அடைந்துள்ளது. இரண்டாம் வெண்மைப்புரட்சியினால் பால் உற்பத்தியாளர்களும் மற்றும் நுகர்வோர்களும் மிகுந்த பயனடைந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடதக்கது. நுகர்வோர் நலனைக் கருத்தில் கொண்டு ஆவின் நிறுவனம் 16 வட்டார அலுவலகங்கள் மற்றும் 49 பால் நுகர்வோர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும் நாள்தோறும் 11.65 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்து வருகிறது. நுகர்வோர்களுக்கு உடனடியாக மாதந்திர பால் அட்டைகள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

**ஆவின் மாதாந்திர பால் அட்டை மற்றும் சில்லறை விற்பனை விலை விபரம் :**

| வ.எண் | பாலின் வகைகள் | கொழுப்பு % | இதர சத்து % | அட்டைதாரர்களுக்கு ½ லிட்டர் | அதிக பட்ச விற்பனை விலை ½ லிட்டர் | பால் பை நிறம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | சமன்படுத்தப்பட்ட பால் | 3.0 | 8.5 | ரூ.17/– | ரூ.18.50 | நீலம் |
| 2 | நிலைபடுத்தப்பட்ட பால் | 4.5 | 8.5 | ரூ.19.50 | ரூ.20.50 | பச்சை |
| 3 | முழுகொழுப்பு செறிந்த பால் | 6.0 | 9.0 | ரூ.21.50 | ரூ.22.50 | ஆரஞ்சு |
| 4 | இருநிலைசமன்படுத்தப்பட்ட பால் | 1.5 | 9.0 | ரூ.16.50 | ரூ.17.00 | மெஜந்தா |

மாதாந்திர பால் அட்டைகள் நுகர்வோர்களுக்கு தங்கு தடையின்றி ஆவின் வட்டார அலுவலகம் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் மூலமும் வழங்கப்படுகிறது. மேலும், நுகர்வோர்கள் தங்கள் வீட்டிலிருந்தபடியே ஆவின் புதிய மாதாந்திர பால் அட்டை வாங்குவதற்கும், புதுப்பிப்பதற்கும் இணைய தளத்தில் வசதி செய்யப்பட்டுள்ளது. இதன்படி ஆவின் www.aavinmilk.com என்ற இணையதளமுகவரியில் நுகர்வோர்கள் பால் அட்டை பெறும் வசதி செய்யப்பட்டுள்ளது. நுகர்வோர்கள் பால் அட்டைக்கான விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து இருப்பிட சான்றிதழ் அல்லது அடையாள அட்டை நகலை சமர்ப்பித்து பால் அட்டைகள் பெற்றுக்கொள்ளலாம்

நுகர்வோர்கள் வீட்டுதிருமணம், வீட்டு நிகழ்ச்சிகளுக்கு, சமையல் கலைஞர்கள் மற்றும் உணவக உரிமையாளர்கள் தங்களின் பால் மற்றும் பால் பொருட்கள் மொத்த தேவைக்கு ஆவின் அலுவலகத்தை நேரிலோ அல்லது இதற்காக அமைக்கப்பட்டுள்ள சிறப்பு மையத்தை 9445530503 என்ற கைபேசியில் தொடர்புகொண்டு முன்பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். நுகர்வோர் தங்களது கருத்துக்களை நுகர்வோர் நலன் மற்றும் சேவை பிரிவை1800 425 3300 (இலவச தொலைபேசி) என்ற எண்ணில் தொடர்புகொண்டு தெரிவிக்கலாம்.

இந்த நிகழ்ச்சியில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு கே.பி.கந்தன் அவர்கள், மற்றும் ஆவின் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**